| | | |
|---|---|---|
| சாட்சி : PW 3<br>ராஜேஸ்கண்ணா | அ.வ.எண். 58/2005 | 04.09.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

வா.சா.ஆ.3, 4, 14, மற்றும் 17 வரையிலான வரிவிதிப்பு ரசீதுகள் எதன் அடிப்படையில் இராஜரெத்தினம் பெயரில் வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது ஆனால் ஏற்கனவே அவர் பெயரில் வரி விதிப்பு இருந்ததன் அடிப்படையில் மேற்படி ரசீதுகள் வழங்கப்பட்டது. நான் எந்த தேதியில் இருந்து சமயபுரம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 16.09.2016 முதல் பணிபுரிந்து வருகிறேன். வா.சா.ஆ.3, 4, 14, மற்றும் 17 ஆவணங்கள் நான் பணியில் சேர்வதற்கு முன்பு வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி வரிரசீதுகள் எதன் அடிப்படையில் அந்த காலக்கட்டத்தில் வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.